சி.சி. 210/2017
தேதி.13/10/2021
ம.சா.1 ஜெயந்தி க/பெ. கோபிகிருஷ்ணன்

மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமானம் செய்து வைக்கப்பட்டு எதிரி தரப்பில் கு.வி. செய்யப்படுகிறார்.

கு.வி.

நான் திருவலத்தில் உள்ள மல்லிகாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். எதிரி எனக்கு ரூ 7,25000/- தரவேண்டும். எதிரி மேற்படி தொகையை என்னிடம் கைமாற்றாக வாங்கினார். எனக்கு தேதி ஞாபகமில்லை ஆனால் மேற்படி தொகைகளை மூன்று தவனைகளாக எதிரிக்கு கொடுத்தேன். முதலில் ரூ75,000/- பின்னர் 3,00000/- அதன் பின்னிட்டு ரூ4,00000/- என்னிடம் வாங்கினார். பணம் கொடுத்த தேதிகளில் நான் ஆவணம் எதுவும் எழுதி வாங்கவில்லை. எதிரி எனக்கு உறவினர் அல்ல. எதிரி இருக்கும் ஊருக்கும் நான் இருக்கும் ஊருக்கும் பஸ்ஸில் சென்றால் 1 மணி நேரம் ஆகும். எதிரி அவருக்கு கடன் பிரச்சனை இருந்ததாலும் தேங்காய் தோப்பை ஏலம் எடுப்பது சம்பந்தமாகவும் என்னிடம் பணம் வாங்கி சென்றார். எதிரியை எனக்கு கஜேந்திரன் என்பவரின் மூலமாக தெரியும். எதிரி ஏலசீட்டு நடத்தி வந்தார். நாங்களும் அவரிடம் சீட்டு போட்டு இருந்தோம். அந்த அடிப்படையில் தான் நான் எதிரிக்கு பணம் கொடுத்தேன். எதிரி ஏலச்சிட்டு நடத்தியபோது நாங்கள் கட்டிய பணத்தை தற்போது வரை திருப்பிதரவில்லை. நான் இந்த வழக்கை ரூ. 7,25,000/- தாக்கல் செய்துள்ளேன். எதிரி ஏலச்சீட்டு நடத்தியதன் மூலம் எதிரி எனக்கு ரூ7,00,000/- தரவேண்டி உள்ளது. எதிரிக்கு நான் உண்மையிலேயே பணம் கொடுத்திருந்தால் எந்த எந்த தேதியில் எவ்வளவு தொகை கொடுத்தேன் என்று ஞாபகம் இருந்து இருக்கும் என்றும், அவ்வாறு நான் பணம் எதுவும் கொடுக்காததால்தான் எந்த தேதியில் பணம் கொடுத்தேன் என்று எனக்கு ஞாபகமில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரி ஏலச்சீட்டு நடத்திகொண்டு இருக்கும்போது கஷ்டமாக இருப்பதாக கூறி என்னிடம் பணம் கேட்டதால் நான் மேற்படி தொகையை அவருக்கு கொடுத்தேன். நான் எதிரி ஏலச்சீட்டு மூலம் பணம் தரவேண்டும் என்பதை நான் இந்த மனுவில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எதிரிக்கும் எனக்கும் எங்கள் ஊரில்பஞ்சாயத்து நடந்தது. 20/9/2016 தேதி பஞ்சாயத்து நடந்தது. ஆகஸ்டு மாதம் கடைசி தேதியில் நான் எதிரியிடம் சென்று பணம் கேட்டேன். அப்போது அவர் பணத்தை கொடுத்து விடுகிறேன் என்று கூறினார். நான் எதிரியிடம் அகஸ்டு மாதம் 2016 வருடம்தான் பணத்தை திரும்ப கொடுக்கும்படி கேட்டேன். நான் எதிரியின் வீட்டிற்கு சென்று அவரிடம் பணம் கேட்டேன். அதன் பிறகு நான் பலமுறை எதிரியிடம் போனில் பணம் கேட்டேன். எந்த எந்த தேதியில் போன்

செய்தேன் என்று ஞாபகமில்லை. நான் ஆகஸ்டு மாதத்திற்கு முன்பு எதிரியின் வீட்டிற்கு 2 , 3 முறை சென்று பணம் கேட்டு இருப்பேன். அப்போதும் எதிரி என்னிடம் பணத்தை கொடுத்துவிடுவதாக கூறி திருப்பி அனுப்பிவிடுவார். எதிரியின் வீட்டில் உள்ளவர்கள் அவரை வீட்டில் வைத்து கொண்டே இல்லை என்று கூறுவார்கள். எதிரி உங்களை ஏமாற்ற மாட்டேன் பணத்தை கொடுத்துவிடுகிறேன் என்று கூறி அனுப்பிவிடுவார். 20/9/2016 தேதி நடந்த பஞ்சாயத்தில் எதிரியும் கஜேந்திரன் என்பவரும் கலந்து கொண்டார்கள். நான் எதிரிக்கு போன் செய்து பஞ்சாயத்திற்கு வரசொன்னதின் பேரில் எதிரி அங்கு வந்தார். மேற்படி பஞ்சாயத்தில் எதிரி 2 மாத கால அவகாசம் கேட்டார். 15/11/2016 தேதி பணத்தை திருப்பி தந்துவிடுவதாக பஞ்சாயத்தில் தெரிவித்தார். மேற்படி பஞ்சாயத்தில் எதிரி 15/11/2016 தேதியிட்ட காசோலையை என்னிடம் கொடுத்தார். நான் சொல்வதுபோல் மல்லிகாபுரத்தில் பஞ்சாயத்து எதுவும் நடைப்பெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரி எனக்கு எந்தவிதமான காசோலையும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள காசோலையில் அதிக அளவில் அடித்தல் திருத்தல் உள்ளது என்றால் அது எதிரி கொடுக்கும்போதே அப்படித்தான் கொடுத்தார். காசோலையில் ரூ.25,000/- என்று இருந்ததற்கு அருகில் 7 என்ற எண் சேர்க்கப்பட்டுள்ளது அதேபோல் எழுத்தில் 7 லட்சம் என்பதும் தனியாக எழுதப்பட்டுள்ளது என்றால் எதிரி எனக்கு அவ்வாறு கொடுத்தார். எதிரி எந்தவிதமான காசோலையும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரி மீது நான் ஏற்கனவே உமராபாத் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். எந்த தேதியில் புகார் கொடுத்தேன் என்று தற்போது ஞாபகமில்லை. நான் உமரபாத் காவல் நிலையத்தை தவிர வேறு எங்கும் புகார் கொடுக்கவில்லை. உமராபாத் காவல் நிலையத்தில் நான் ஒருமுறைதான் புகார் கொடுத்தேன். நான் நீதிமன்றத்திலும் எந்த புகாரும் கொடுக்கவில்லை. அந்த புகாரின் அடிப்படையில் போலீசார் எதிரியை கைது செய்தார்கள். அந்த புகாரில் நான் எதிரியிடமிருந்து எனக்கு மொத்தமாக ரூ7,00,000/- வரவேண்டும் என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் மேற்படி புகாரில் எதிரி என்னிடம் மேற்படி தொகையை கைமாற்றாக வாங்கிய விவரத்தை குறிப்பிடவில்லை. நான் உமராபாத் காவல் நிலையத்தில் கொடுத்துள்ள புகார் முற்றிலும் உண்மைக்கு புறம்பானது என்று சொன்னால் சரியல்ல. அந்த வழக்கில் எதிரியை எந்த தேதி கைது செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. மேற்படி புகாரில் எதிரி எனக்கு காசோலை வழங்கிய விவரத்தை நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஆம்பூர் நீதிமன்றத்தில் எதிரியை பிணையில் விடக்கூடாது என்று கூறி நான் ஆட்சேபனை மனு 30/9/2016 தேதி வழக்கறிஞர் மூலமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த ஆட்சேபனை மனு சான்றிட்ட நகல் எதசாஆ.1 ஆகும். எதிரிக்கும் எனக்கும் 20/9/2016 தேதி பஞ்சாயத்து நடைப்பெற்று அந்த பஞ்சாயத்தில் எதிரி எனக்கு காசோலை வழங்கிய பிறகு எதற்காக 30/9/2016 தேதி ஆம்பூர் நீதிமன்றத்தில் எதிரியை பிணையில்

விடக்கூடாது என்று ஆட்சேபனை மனு தாக்கல் செய்தேன் என்றால் எதிரி பணம் கொடுக்க மறுத்ததால் நான் ஆட்சேபனை மனு தாக்கல் செய்தேன். எதிரி மீது நான் ஆம்பூர் காவல் நிலையத்தில் எந்த தேதியில் புகார் தாக்கல் செய்தேன் என்று ஞாபகமில்லை. மேற்படி புகாரை நான் 30/6/2016 தேதி தாக்கல் செய்துள்ளேன். எதிரி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய கூறி தாக்கல் செய்த புகார் மனு சான்றிட்ட நகல் எதசாஆ.2 ஆகும். ஆம்பூர் நீதிமன்றத்தில் நடந்த விவரங்கள் தொடர்பாக எதையும் நான் இந்த மனுவில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். புகாரை நான் ஆம்பூரில் நீதிமன்றத்தில் கொடுத்த பிறகு எதற்கு பஞ்சாயத்திற்கு சென்றேன் என்றால் எங்கள் ஊரில் தலைவர்களை வைத்து பேசலாம் என்று பஞ்சாயத்திற்கு சென்றேன். நான் பஞ்சாயத்தில் எதிரி மீது ஆம்பூர் நீதிமன்றத்தில் கொடுத்த புகாரை வாபஸ் வாங்கிகொள்ளவதாக சொல்லவில்லை. ஆம்பூர் நீதிமன்றத்தில் உள்ள வழக்கு பற்றி நான் பஞ்சாயத்தில் எதையும் பேசவில்லை. நான் ஏமாற்றும் நோக்கோடுதான் பஞ்சாயத்திற்கு வரவைத்தேன் என்று சொன்னால் சரியல்ல.

(எதிரி தரப்பில் கேட்டுகொண்டதற்கு இணங்க கு.வி) ஒத்திவைக்கப்பட்டது.